கோர்க்கப்பட்ட வசனம் 1 யோவான் 5:7

Erasmus

Portrait of Erasmus of Rotterdam (1523)
by Hans Holbein the Younger

கோர்க்கப்பட்ட வசனம் 1 யோவான் 5:7

ரோமன் கத்தோலிக்க திருச்சபையால் கோர்க்கப்பட்ட வசனம் 1 யோவான் 5:7 இவ்வசனம் கோர்க்கப்பட்ட வசனமா? அல்லது உண்மையில் பரிசுத்த யோவானால் எழுதப்பட்டவசனமா? ஆச்சர்யமாக்கி அதிரவைக்கும் உண்மை.

1 யோவான் 5:7,8

7. [பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;

8. பூலோகத்திலே] சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது.

இவ்வசனம் 15 ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் இலத்தின் (Latin), கிரேக்கம் (Greek) போன்ற மொழிகளில் கோர்க்கப்படவில்லை. கோர்க்கப்படாத ஆதாரத்தை இலத்தின் மொழியிலும் கிரேக்க மொழியிலும் நீங்கள் பார்க்கலாம்.

Excerpt from Codex Sinaiticus including 1 John 5:7–9. It lacks the Johannine Comma. The purple-coloured text says: "There are three witness bearers, the Spirit and the water and the blood".



This photograph shows Greek text of 1 John 5:3–10 which is missing the Comma

கோர்க்கப்பட்ட வசனம் 1 யோவான் 5:7

உங்கள் வேதாகமத்தை எடுத்து வாசித்து பாருங்கள். நீங்கள் கவனிக்கவேண்டிய இரண்டு காரியங்கள் உண்டு.

முதலாவது இவ்வசனம் Bracket எனப்படும் அடைப்புக்குறியுள் எழுதப்பட்டுள்ளது.

1

7. [பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்;

8. பூலோகத்திலே] சாட்சியிடுகிறவைகள் மூன்று, ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது.

இரண்டாவது பிதா வார்த்தை பரிசுத்தஆவி என்ற மூன்று தனி தெய்வங்கள் பரலோகத்தில் ஒன்றாயிருந்து சாட்சி இடுவார்கள் என்று எழுதபட்டுயிருக்கிறது, இதில் சாட்சி இடுவார்கள் என்கிற பன்மையை நீங்கள் கவனிக்கலாம்.

இவ்வசனம் வேதாகமத்தில் சர்ச்சை குறியதாயிருக்கிறது. அதாவது அடைப்புக்குறியுள் இருக்கும் இவ்வசனம் ஒருசில வேதாகமங்களில் இல்லை என்பது உண்மை.

கோர்க்கப்பட்ட வசனம் 1 யோவான் 5:7

New World translation of the Holy Scriptures என்கிற வேதாகமத்தில்

1 யோவான் 5:7 ஆம் வசனத்தை வாசிக்கும்போது அடைப்புக்குறியுள் இருக்கும் வசனம் அதில் இல்லை. ஆனால் King James version என்கிற ஆங்கில வேதாகமத்தில் வாசிக்கும்பொழுது அடைப்புக்குறியுள் இருக்கும் வசனம் கோர்க்கப்பட்டுள்ளது. இப்பொழுது King James version என்கிற ஆங்கில வேதாகமத்தில் இருக்கும் வசனத்தை வாசித்துப்பார்ப்போம்.





1 John 5:7 King James Version (KJV)

7 For there are three that bear record in heaven, the Father, the Word, and the Holy Ghost: and these three are one. இவ்வசனம் திருத்துவத்தை (Trinity) குறிக்கிறது.



7 ¹For there are three that bear record in heaven, the Father, the Word, and the Ho'ly Ghost: and these three are one.

¹Hag. 2:5, 7

8 And there are three that bear witness in earth, the spirit,

கோர்க்கப்பட்ட வசனம் 1 யோவான் 5:7

New World translation of the Holy Scriptures என்கிற வேதாகமத்தில் இவ்வசனத்தை வாசித்துப்பார்ப்போம்.

1 John 5:7 New World Translation of the Holy Scriptures

7. For there are three witness bearers



CHAP. 4
a Mt 1:21
Joh 3:17
Joh 12:47
Ac 5:31
b Ro 10:9
c 1Jo 2:23, 24
d Joh 3:16
e 1Jo 4:8
f Joh 17:21
g Heb 4:16
1Jo 2:28
h Ro 8:15
i 1Jo 2:5
j 1Jo 4:10
k 1Jo 2:4
l 1Jo 3:17
m 1Jo 4:12
n Mt 22:37, 39

the world.[a] And
this is the conquest that has con-
quered the world, our faith.[b]
5 Who can conquer the
world?[c] Is it not the one who
has faith that Jesus is the Son
of God?[d] 6 This is the one who
came by means of water and
blood, Jesus Christ, not with the
water only,[e] but with the water
and with the blood.[f] And the spir-
it is bearing witness,[g] because
the spirit is the truth. 7 For
there are three witness bearers:
8 the spirit[h] and the water[i] and
the blood;[j] and the three are in
agreement.

மேலும் இந்த வசனம் ,N I V போன்ற வேதகமத்திலும் இல்லை.

1 John 5:7-8 New International Version (NIV)

7 For there are three that testify: 8 the[a] Spirit, the water and the blood; and the three are in agreement.

Footnotes:

a. 1 John 5:8 Late manuscripts of the Vulgate *testify in heaven: the Father, the Word and the Holy Spirit, and these three are one. 8 And there are three that testify on earth: the* (not found in any Greek manuscript before the fourteenth century)

கோர்க்கப்பட்ட வசனம் 1 யோவான் 5:7

King James version என்கிற தமிழ் வேதாகமத்தில் அடைப்புக்குறியுள் கோர்க்கப்பட்ட இவ்வசனம் கன்னடம், இந்தி, தெலுங்கு போன்ற பிற மொழி பரிசுத்த வேதாகமத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1 யோவான் 5:7 இருக்கும் சர்ச்சைக்குரிய இவ்வசனத்தை கேள்விகளாக பல இஸ்லாமிய மதகுருக்கள் கேட்டு வருகின்றனர். இவர்கள் கேட்கும் கேள்வியென்ன. ஏன் 1 யோவான் 5:7 ஆம் வசனம் ஒவ்வொரு வேதாகமத்திலும் ஒவ்வொரு விதமாய் எழுதப்பட்டுள்ளது? காரணம் என்ன? இவர்களது கேள்வி சரியா தவறா? ஆம் இவர்களது கேள்வி சரியே. 1 யோவான் 5:7 அடைப்புக்குறியுள் கோர்க்கப்பட்ட வசனம் எப்பொழுது வேதாகமத்தில் கோர்க்கப்பட்டது, யாரால் கோர்க்கப்பட்டது, அவரது பெயர்ரென்ன? கி.பி 1522 ஆம் ஆண்டு டிசைடெரியஸ் ஈராஸ்மஸ் (DESIDERIUS ERASMUS) என்கிற டச் DUTCH ரோமன் கத்தோலிக்க பாதிரியார் கிரேக்க புதிய ஏற்பாட்டின் வேதாகமத்தில் இந்த அடைப்புக்குறி வசனத்தை கோர்த்தார். மேலும் இவ்வசனம் வுள்கேட் (Vulgate) என்ற ரோமன் கத்தோலிக்க இலத்தின் வேதாகமத்தில் கோர்க்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

Portrait of Desiderius Erasmus of Rotterdam with Renaissance Pilaster. Desiderius Erasmus of Rotterdam (1466/69–1536) was a renowned humanist

கோர்க்கப்பட்ட வசனம் 1 யோவான் 5:7

15ஆம் நூற்றாண்டிற்கு முன்னர் புதிய ஏற்படின் மூல பாஷையாகிய கிரேக்க பாஷையிலுருந்து மொழி பெயர்க்கப்பட்ட எத்தோப்பியா (ETHIOPIA) மொழி வேதம், அராமைக் (ARAMAIC) மொழி வேதம், சிரிய (SYRIAC) மொழி வேதம், அரபிக் (ARABIC) மொழி வேதம் போன்ற வேதாகமங்களில் இந்த கோர்க்கப்பட்ட வசனம் காணப்படவில்லை.



1 யோவான் 5:7

7. [பரலோகத்திலே சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்த ஆவி என்பவர்களே, இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள் என்ற வசனம் பரிசுத்த யோவானால் மூல பாஷையாகிய கிரேக்க பாஷையில் எழுதப்படவில்லை. மாறாக டிசைடெரியஸ் ஈராஸ்மஸ் (DESIDERIUS ERASMUS) என்கிற டச் (DUTCH) ரோமன் கத்தோலிக்க பாதிரியாரால் கிரேக்க புதிய ஏற்பாட்டில் கோர்க்கப்பட்டதே.

இப்படிப்பட்ட கள்ள எழுத்தாணி சில கள்ள வேதபாரகர் மூலம் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்படும்மென்பதை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாக எரேமியா தீர்க்கதருசியால் உரைக்கப்பட்ட திர்க்கதரிசனம் நிறைவேறியது.

கோர்க்கப்பட்ட வசனம் 1 யோவான் 5:7

எரேமியா 8 : 8-9 ஆம் வசனத்தை வாசித்து பாருங்கள்

8.நாங்கள் ஞானிகளென்றும், கர்த்தருடைய வேதம் எங்களிடத்திலிருக்கிறதென்றும் நீங்கள் சொல்லுகிறதெப்படி? மெய்யாகவே, இதோ, வேதபாரகரின் கள்ள எழுத்தாணி அதை அபத்தமாக்குகிறது

9. ஞானிகள் வெட்கி, கலங்கிப் பிடிபடுவார்கள்; இதோ, கர்த்தருடைய சொல்லை வெறுத்துப்போட்டார்கள்; அவர்களுக்கு ஞானமேது?

ஆம் கள்ள உபதேசத்திற்கும் கள்ள எழுத்தாணிக்கும் எச்சரிக்கையாயிருக்கள்

உங்கள் திருத்துவம் சார்ந்த கேள்வி பதில்களுக்கு எங்களது முந்தைய VIDEO வைப் பார்க்க எங்கள் YOUTUBE CHANNEL யை பார்க்கவும்.

Tamil Sound Doctrine : https://www.youtube.com/channel/UCSqfsyZMqfmHXiO-DHWpy7w



KINDLY PRINT THIS DOCUMENT AND CIRCULATE THE TRUTH

Tamil Sound Doctrine

https://www.youtube.com/watch?v=00RnG3N-im8